

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
| --- |
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்

## Part-A- General Tamil

### 12 ஆம் வகுப்பு - பழைய புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. பண்ணொடு கலந்துந் தாளத்தொடு கூடியுயங்கு செந்தமிழ் - எவ்வாயில் அறியலாம்.
   (A) இயல்தமிழ்
   (B) இசைத்தமிழ்
   (C) நாடகத்தமிழ்
   (D) அனைத்தும்
   (E) விடை தெரியவில்லை

2. பொருந்தாதது எது.
   (A) சுதேசாபிமானம் - தாய்நாட்டுப் பற்று
   (B) சுபாஷாபிமானம் - தாய்மொழிப் பற்று
   (C) பாகதங்கள் - பிரிவுகள்
   (D) மேற்கண்ட எதுவுமில்லை
   (E) விடை தெரியவில்லை

3. முற்காலத்தில் வழங்கிய இசைத்தமிழ் நூல்களில் பொருந்தாதது எது.
   (A) பெருநாரை
   (B) பெருங்குருகு
   (C) தேவாரம்
   (D) இசை நுணுக்கம்
   (E) விடை தெரியவில்லை

4. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி புகழ் செம்மொழி என்று இலக்கணம் கூறியவர் - பரிதிமாற்கலைஞர்
   2. சமரசம் என்ற உடைநடையை எழுதியர் - திருவிக.
   3. ஒருவன் நான் பிறந்த நாட்டைத் தாய்போல் நேசிக்கலாம். ஆனால் அந்தேசத்தை மற்ற நாடுகளின் துன்பத்துக்குப் பயன்படுத்தலாகாது என்று கூறியவர் - திருவிக.

   மேற்கண்டவற்றில் சரியானது எது.
   (A) 1 மட்டும் சரி
   (B) 2 மட்டும் சரி
   (C) 3 மட்டும் சரி
   (D) அனைத்தும் சரி
   (E) விடை தெரியவில்லை

5. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. எல்லாக் கொடுமைகளிலும் தலையாயது சாதி கொடுமை
   2. உலகத்தினியல்பினை உள்ளதையுள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகம்
   3. எல்லா நாட்டார் எல்லா மொழியினர், எல்லாச் சமயத்தார், எல்லாச் சாதியாரிடத்திலும் புகுந்து நிற்பது சமரச ஞானம்
   4. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை சாதி என்று திரு.வி.க. கூறுகிறார்.

   மேற்கண்டவற்றில் சரியானது எது.

   (A) 1 2 3
   (B) 2 3 4
   (C) 1 3 4
   (D) மேற்கண்ட அனைத்தும்
   (E) விடை தெரியவில்லை

6. கவிதை இது அல்ல, இது அல்ல என எளிதில் கூறிவிடலாம், ஆனால் இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல – என்று கூறியவர் யார்.

   (A) கோலரிட்ஜின்
   (B) வோர்ட்ஸ் வொர்த்
   (C) ஜான்ஸ்ன்
   (D) கீட்ஸ்
   (E) விடை தெரியவில்லை

7. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. வசனத்திற்கும் கவிதைக்கும் ஓர் இலக்கணம் வகுத்தவர் - கோலரிட்ஜின்
   2. சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம் என்றும் சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை என்று கூறியவர் - கோலரிட்ஜ்
   3. ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை என்றவர் - வோர்ட்ஸ்வொர்த்
   4. முன்பு கிளர்ந்த ஓர் உணர்ச்சிப் பெருக்கை மீண்டும் சாந்த நிலையிலிருந்து நினைவிற்குக் கொண்டு வரும்போது தான் கவிதை தோன்றுகிறது என்றவர் - வோர்ட்ஸ்வொர்த்

   மேற்கண்டவற்றில் சரியானது எது.

   (A) 1 2
   (B) 2 3
   (C) 3 4
   (D) 1 2 3 4
   (E) விடை தெரியவில்லை

8. யார் ஆற்றலின் சிகரம் என்றும், ஆற்றல் தனது வலப் புயத்தில் தலை சாய்ந்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை கவிதை என்றவர்
   (A) வோர்ட்ஸ்வொர்த்
   (B) ஜான்ஸன்
   (C) கோலரிட்ஜ்
   (D) கீட்ஸ்
   (E) விடை தெரியவில்லை

9. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை – கீட்ஸ்
   2. சீரிய உணர்ச்சிகுரிய காரணங்களைப் பாவனாசக்தியால் குறிப்பிடுவதே கவிதையாகும் - ஜான் ரஸ்கின்
   3. செய்யுள் நெறியில் இயறப்பப்படுவதே கவிதை என்று ஆங்கில பேரகராதி கூறுகிறது.
   4. பல்வகைத் தாதுவின் உயிர்க்கும் போறபல – பவணந்தி முனிவர்

   மேற்கண்டவற்றில் சரியானது எது.
   (A) 1 2
   (B) 3 4
   (C) 1 3 4
   (D) 1 2 3 4
   (E) விடை தெரியவில்லை

10. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ- திருமூலர்
   2. இராபர்ட் பாட்டன் எல்லா கவிஞர்களும் பைத்தியக்காரர்களே என்ற விநோத முடிவிற்கு வந்தார்.
   3. உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் - பாரதியார்
   4. கம்பர் கவிதையைக் கற்ககற்க தமிழர்கள் கொண்ட இலட்சியத்தை உணர்த்தி, அவர்களது பண்பாட்டின் உச்சத்தையும் தொட்டுவிடுதல் நமக்குப் புலனாகிறது.

   மேற்கண்டவற்றில் தவறானது எது.
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) 4 மட்டும்
   (E) விடை தெரியவில்லை

11. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தமிழுக்கும் அமுதென்று பேர்
2. சங்கே முழங்கு
3. உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே
4. தமிழன் விந்தையை எழுத்தரமோ
5. தமிழே நீயோர் பூக்காடு, நானோர் தும்பி

மேற்கண்ட பாடல் வரிகளுக்கு உரித்தானவர் யார்.

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) நாமக்கல் கவிஞர்
(D) பெருஞ்சித்திரனார்
(E) விடை தெரியவில்லை

12. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பேழை – பெட்டி
2. திணையளவு நலமேனும் கிடைக்குமென்றால் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும் - பாரதியார்
3. தொண்டு செய்வாய் தமிழுக்குத் - பாரதிதாசன்
4. இரசூல் கம்சதேவ் உருசியம் நாட்டு கவிஞர்

மேற்கண்டவற்றில் தவறானது எது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 4 மட்டும்
(E) விடை தெரியவில்லை

13. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தேம்பாவனி நூலின் பாட்டுடைத்தலைவன் - சூசை மாமுனிவர்
2. திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்
3. கொன்ஸ்டான் என்னுச் சொல்லுக்கு பொருள் - அஞ்சாதவன்
4. மறுமலர்ச்சிக் கருத்துகளை பாரதிதாசன் பாடலில் பரப்பியதால் சுதந்திரக்கவி எனப் போற்றப்பட்டார்.

மேற்கண்டவற்றில் தவறானது எது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 4 மட்டும்
(E) விடை தெரியவில்லை

14. பொருத்துக.

a. மாலி — வலிமை

b. நிருபன் - இடி

c. செல் - சூரியன்

d. அசனி — அரசன்

e. மிடல் - மேகம்

(A) 1 2 3 4 5

(B) 5 4 3 2 1

(C) 3 4 5 2 1

(D) 4 3 2 5 1

(E) விடை தெரியவில்லை

15. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. இவர் எழுதிய பிசிராந்தையார் நாடகம் சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றது.
2. குயில் என்ற இலக்கியத்தை வெளியிட்டார்.
3. வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயோ என்ற பாடலை புதுவை அரசு தனது தமிழ் வாழ்த்துப் பாடலாக ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்கண்ட வாக்கியங்கக்கு உரியவர் யார்.

(A) பாரதியார்

(B) வெ. இராமலிங்கனார்

(C) பாரதிதாசன்

(D) நாமக்கல் கவிஞர்

(E) விடை தெரியவில்லை

16. தவறானது எது.

(A) தமிழின் முதல் ஏளன நூல் - பரமார்த்த குருகதை

(B) தமிழின் முதல் அகராதி — சதுரகராதி

(C) தமிழ் அகராதியின் தந்தை — வீரமாமுனிவர்

(D) குட்டித்தொல்காப்பியம் - இலக்கண விளக்கம்

(E) விடை தெரியவில்லை

17. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. வீரமாமுனிவர் 36 வருடம் சமயப்பணியுடன் தமிழ்ப் பணியும் புரிந்தார்.
2. வீரமாமுனிவர் 1710 ம் வருடம் தமிழ்நாட்டிற்கு வந்தார்
3. வீரமாமுனிவர் சென்னையில் இயற்கையெழுதினார்
4. கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் இரட்சண்ய மனோகரம்

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) 4 மட்டும்

(E) விடை தெரியவில்லை

18. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தேம்பா + அணி என்னுங்கால் என்றும் வாடாத மாலை
2. தேன் + பா + அணி என்றும்போது தேன் போன்ற பாக்களை அணியாக உள்ளது.
3. வீரமாமுனிவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) 1 2 3

(E) விடை தெரியவில்லை

19. பொருந்தாதது. தேம்பாவணி

(A) மூன்று காண்டம்

(B) முப்பதாறு படலங்கள்

(C) மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்கள்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

(E) விடை தெரியவில்லை

20. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. சீதாப்பிராட்டி தன்னை ஒரு திங்களில் மீட்டுச்செல்ல வேண்டி விதித்த காலம்
2. நாளவட்டத் தளிம நளினத் தொடுந்துத்தி நாகனையும் விட்டொரெட்டு – குமரகுருபர்
3. சுந்தரன் என்னும் பெயர் அனுமன்
4. இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் கணையாழி காட்டினார்.

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1 2
(B) 2 3 4
(C) 1 2 3 4
(D) 4 1
(E) விடை தெரியவில்லை

21. பொருத்துக.

a. முளரி - 1. தாமரை
b. வையகம் - 2. தரை
c. மருகி - 3. மருமகள்
d. தனயை - 4. மகள்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 4 1 2
(E) விடை தெரியவில்லை

22. வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் ------- என்று ஒரு கணக்கீடும் உண்டு

(A) தொண்ணூறு
(B) தொண்ணிரண்டு
(C) தொண்ணூற்றாறே
(D) நூறு
(E) விடை தெரியவில்லை

23. கண்ணகியென்னுஞ் சொல்லுக்கு ------- என்பது பொருள்

(A) கண்களால் நகுபவள்
(B) அழகிய கண்களை கொண்டவள்
(C) அழகிய இடையைக் உடையவள்
(D) அழகிய நெற்றியை உடையவள்
(E) விடை தெரியவில்லை

24. பொருத்துக.

a. இளங்கோவடிகள் - 1. மணிமேகலை

b. திருத்தக்கதேவர் - 2. சிலப்பதிகாரம்

c. நாதகுத்தனார் - 3. சீவகசிந்தாமணி

d. சீத்தலைச் சாத்தனார் - 4. வளையாபதி

- 5. குண்டலகேசி

(A) 1 2 3 4

(B) 2 3 4 5

(C) 2 3 5 1

(D) 4 5 2 1

(E) விடை தெரியவில்லை

25. பொருத்துக.

a. பாலை நில மக்களின் பாட்டு – 1. அம்மானை வரி

b. நெய்தல் நில மக்களின் பாட்டு – 2. ஊசல் வரி

c. பந்தடிக்கும்போது பாடும்பாட்டு - 3. கந்துக வரி

d. ஊஞ்சலாட்டத்தின்போது பாடும் பாட்டு – 4. கானல்வரி

e. கழங்காட்டத்தின்போது பாடும் பாட்டு – 5. வேட்டுவ வரி

(A) 1 2 3 4 5

(B) 5 4 3 2 1

(C) 3 4 5 2 1

(D) 4 3 2 1 5

(E) விடை தெரியவில்லை

26. விருந்து – என்பதின் இலக்கணக்குறிப்பு

(A) சொல்லாகு பெயர்

(B) கருத்தாகு பெயர்

(C) பண்பாகு பெயர்

(D) காரியவாகு பெயர்

(E) விடை தெரியவில்லை

27. பொருத்துக.

திணை - பொழுது

a. குறிஞ்சி - 1. நண்பகல்

b. முல்லை - 2. யாமம்

c. மருதம் - 3. மாலை

d. நெய்தல் - 4. வைகறை

e. பாலை - 5. எற்பாடு

(A) 2 3 5 4 1

(B) 1 2 3 4 5

(C) 5 4 3 2 1

(D) 2 3 4 5 1

(E) விடை தெரியவில்லை

28. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. உள்ளே தொட்டால் உரிசில் இனிக்கு தௌ;ளுதமிழ் - பாரதிதாசன்

2. சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்த்தேன் சாத்திரக் குப்பையும் தணந்தேன் வள்ளலார் அருளியவர்

3. திரிபலை என்பது நெல்லிக்காய், தான்றிக்காய், கடுகாய்

மேற்கண்டவற்றில் சரியானது எது

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) 1 2 3

(E) விடை தெரியவில்லை

29. அறைபிறை யன்னர் கயவர்தாங் கேட்ட

மறைபிறர்க்கு உய்த்துரைக்க யான் - என்ற குறளில் யாரிடம் ரகசியம் கூறக்கூடாது என்று வள்ளுவர் கூறிகிறார்.

(A) பெரியோரிடம்

(B) சிறுவர்களிடம்

(C) பொருள் இருப்பவர்களிடம்

(D) கயவரிடம்

(E) விடை தெரியவில்லை

30. கம்பர் குறித்து
    1. சோழ நாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர்
    2. காலம் 12ம் நூற்றாண்டு
    3. கவிச்சக்கர்த்தி எனப் போற்றப்படுகிறார்.
    4. கவிப் பேரரசர் என்று அழைக்கப்படுகிறார்.
   (A) 1 மட்டும் சரி
   (B) 2 மட்டும் சரி
   (C) 3 மட்டும் சரி
   (D) 1 2 3 4 சரி
   (E) விடை தெரியவில்லை

31. மரபுச் சொற்களில் தவறானது
   (A) பலாப்பிஞ்சு – பலாமூசு
   (B) வாழைப்பிஞ்சு – வாழைக்கச்சல்
   (C) இளந்தேங்காய் - நெற்று
   (D) முருங்கைப் பிஞ்சு – முருங்கைச் சரடு
   (E) விடை தெரியவில்லை

32. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. குல்லா | - | 1. போர்ச்சுகீசியம் |
| b. ரிக்ஷா | - | 2. பார்ஸி |
| c. எக்கச்சக்கம் | - | 3. ஜப்பானி |
| d. அலமாரி | - | 4. தெலுங்கு |

   (A) 1 2 3 4
   (B) 4 3 2 1
   (C) 3 2 4 1
   (D) 2 3 4 1
   (E) விடை தெரியவில்லை

33. பிள்ளையார்பட்டி என்னும் ஊரில் குடைவரைக் கோயில் (பழமையானது) காணப்படுகிறது. பிள்ளையார்பட்டி எந்த மாவட்டத்தைச் சார்ந்தது.
   (A) நெல்லை
   (B) தூத்துக்குடி
   (C) மதுரை
   (D) இராமநாதபுரம்
   (E) விடை தெரியவில்லை

34. பொருத்துக.

a. நபர் - டச்சு

b. பேனா - இந்துஸ்தானி

c. இனாம் - உருது

d. ரூபாய் - போர்ச்சுகீசியம்

e. துட்டு – அரபி

(A) 2 3 4 5 1

(B) 2 4 1 5 3

(C) 1 2 3 4 5

(D) 5 4 3 2 1

(E) விடை தெரியவில்லை

35. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. கூட்டுறவுக்கு இடையூறு வந்தால் அதை வெவல அறப்படை வேண்டும்.
2. உழைப்புக்கும் பஞ்சம் வந்தால், அதை வெல்ல உழுநிலம் வேண்டும்
3. சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இல்லாத சாதி சமயம் கட்சி முதலியவற்றில் ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைவதற்கு இதுவே வழியாகும்.

மேற்கண்டவற்றில் சரியானது எது

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) மேற்கண்ட அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

36. கடுதாசி – என்பது எவ்வகையான மொழிச்சொல்

(A) பிரெஞ்சு

(B) போர்ச்சுகீசியம்

(C) டச்சு

(D) உருது

(E) விடை தெரியவில்லை

37. பிறமொழிச் சொற்கள் இல்லாத தொடர்

(A) இந்த செஞ்சரி டென்ஷன் நிறைந்தது

(B) இந்த நூற்றாண்டு பதற்றம் நிறைந்தது

(C) இந்த நூற்றாண்டு அழுத்தம் நிறைந்தது

(D) இந்த செஞ்சுரி பதற்றம் நிறைந்தது

(E) விடை தெரியவில்லை

38. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும் - என்ற தொடரின் சரியான தமிழாக்கம் என்ன.
   (A) நீரிழிவு நோயாளி ஸ்வீட் சாப்பிடுவதை நிறுத்த செய்ய வேண்டும்
   (B) நீரிழிவு நோயாளி இனிப்பு சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்
   (C) டயாபெட்டிக் பேஷண்ட் இனிப்பு சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.
   (D) நீரிழிவு நோயாளி இனிப்பு சாப்பிடுவதை நிறுத்த செய்ய வேண்டும்.
   (E) விடை தெரியவில்லை

39. சரியான நிறுத்தறகுறி எது.
   (A) ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது!., என்று என் தந்தை சொன்னார்.
   (B) "ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது", என்று என் தந்தை சொன்னார்.
   (C) ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது, என்று என் தந்தை சொன்னார்.
   (D) "ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது" என்று என் தந்தை சொன்னார்.
   (E) விடை தெரியவில்லை

40. வாக்கியத்தில் உண்டாகும் பிழை நீக்கியத் தொடர்
   (A) வண்டிகள் ஓடாது
   (B) அவை இங்கே உளது.
   (C) அது எல்லாம்
   (D) மக்கள் இல்லை
   (E) விடை தெரியவில்லை

41. தவறானது எது.
   (A) ஒன்றொ இரண்டோ தருக.
   (B) சென்னை என்னும் நகரம்
   (C) எனது மகன்
   (D) ஏற்கத்தக்கது அன்று
   (E) விடை தெரியவில்லை

42. கொச்சைச் சொற்கள் நீக்கிய தொடர்
   (A) அப்பிசி மாசம் அடைமழை என்பார்கள்
   (B) ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்
   (C) ஐப்பசி மாதம் அடமழை இம்பாங்க
   (D) ஐப்பசி மாதம் அடைமழை இம்பாங்க
   (E) விடை தெரியவில்லை

43. சரியானத் தொடர் எது.
(A) கோழிமுட்டை தாழ்வாரத்தில் உருண்டது.
(B) வெடியற்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பழக்கமா?
(C) ஒருத்தன் ஒண்டியாயப் போனர் அது ஊர்கோலமா?
(D) கொடுத்த சேதியைக் கோர்வையாய்ப் பேசுக.
(E) விடை தெரியவில்லை

44. சரியானது எது.
(A) என் வீடு
(B) என்னுடைய வீடு
(C) எம்முடைய வீடு
(D) எந்தையுடைய வீடு
(E) விடை தெரியவில்லை

45. சரியானது எது.
(A) வீட்டில் இருந்து போனான்
(B) வீட்டில் இருந்து வந்தான்
(C) வீட்டிலிருந்து போனான்
(D) வீட்டிலிருந்து வந்தான்
(E) விடை தெரியவில்லை

46. தவறானது
(A) Please speak – பேசுக
(B) Please bring – கொணர்க
(C) Please type – தட்டச்சு செய்க.
(D) Please – உதவி
(E) விடை தெரியவில்லை

47. சரியானது எது.
(A) இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும் ஓவியப் பொலியும் நம்மைக் கவர்கின்றன.
(B) இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.
(C) இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும் ஓவியப் பொலவும் நம்மை கவர்கின்றன.
(D) இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும் ஓவியப் பொழிவும் நம்மைக் கவர்கின்றன.
(E) விடை தெரியவில்லை

48. மிளகுநீரைச் (சாற்றமுது) சாத்தமுது என்பது ------ மரபு.
(A) சைவம்
(B) வைணவர்
(C) சமயம்
(D) மேற்கண்ட எதுவுமில்லை.
(E) விடை தெரியவில்லை

49. ஆசிரியரை ஐயர் என்றே அழைப்பது ---- வட்டத்தார் மரபு
(A) சென்னை
(B) காஞ்சிபுரம்
(C) மதுரை
(D) வேலூர்
(E) விடை தெரியவில்லை

50. அமிழ்தத்தை உப்புச்சாறு என்பது --- கோவில் மரபு
(A) காஞ்சிபுரம்
(B) சீரங்கம்
(C) மதுரை
(D) தஞ்சாவூர்
(E) விடை தெரியவில்லை

51. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. திருவரங்கம் | - | 1. மீனாட்சி |
| b. திருச்சிற்றம்பலம் | - | 2. விருத்தாசலம் |
| c. திருமறைக்காடு | - | 3. வேதாரணியம் |
| d. திருமுதுகுன்றம் | - | 4. சிதம்பரம் |
| e. அங்கயற்கண்ணி | - | 5. ஸ்ரீரங்கம் |

(A) 1 2 3 4 5
(B) 5 4 3 2 1
(C) 1 4 3 2 5
(D) 5 4 3 1 2
(E) விடை தெரியவில்லை

52. குடமூக்கு – என்பது எவ்வூரின் கடவுள் பெயர்
(A) விருத்தாசலம்
(B) கும்பகோணம்
(C) காஞ்சிபுரம்
(D) சிதம்பரம்
(E) விடை தெரியவில்லை

53. சரியானது?

| | இலை | இழை | இளை |
|---|---|---|---|
| (A) | செடி | அழைத்தல் | மெலிந்துபோதல் |
| (B) | கொடி | இழுக்கம் | மெலிந்து போதல் |
| (C) | மரம் | அவமானம் | மெலிந்து போதல் |
| (D) | மரம் | செய் | மெலிந்து போதல் |

(E) விடை தெரியவில்லை

54. பொருத்துக.

a. தாழி – 1. பலம்
b. கிலி – 2. குடம்
c. ஒழி – 3. கட்டுதல்
d. தளை – 4. தொலைத்து விடு

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 4 2 1
(E) விடை தெரியவில்லை

55. வாலை என்பதன் பொருள் எது.

(A) இளம்பெண்
(B) மரவகை
(C) மீன்வகை
(D) மீன்பிடி வலை
(E) விடை தெரியவில்லை

56. பொருத்துக.

a. ரெக்கார்ட் - 1. கோப்பு
b. செகரட்டரி - 2. மேலாளர்
c. மேனேஜர் - 3. செயலர்
d. பைல் - 4. ஆவணம்

(A) 2 1 4 3
(B) 1 2 3 4
(C) 4 2 1 3
(D) 4 3 2 1
(E) விடை தெரியவில்லை

57. பொருத்துக.

a. புரோநோட் - 1. வாகைசூடி
b. பால்கனி - 2. வடிவமைப்பு
c. பாஸ்போர்ட் - 3. கடவுச்சீட்டு
d. டிசைன் - 4. முகப்புமாடம்
e. சாம்பியன் - 5. ஒப்புச் சீட்டு

(A) 2 3 1 4 5
(B) 1 2 3 4 5
(C) 5 4 2 3 1
(D) 5 4 3 2 1
(E) விடை தெரியவில்லை

58. தவறானது எது.

(A) விசா - நுழைவு இசைவு
(B) டெலிகேட் - பேராளர்
(C) புரபோசல் - வாழ்த்து
(D) பிரீப்கேஸ் - குறும்பெட்டி
(E) விடை தெரியவில்லை

59. சரியானது எது.

(A) ரசீது – காசோலை
(B) செக் - பற்றுச்சீட்டு
(C) மெயின் ரோடு – முதல் சாலை
(D) லம்சம் - திரட்சித்தொகை
(E) விடை தெரியவில்லை

60. பொருத்துக.

a. அரண் - 1. சிவன்
b. அரன் - 2. மதில்
c. அண்ணம் - 3. ஒரு பறவை
d. அன்னம் - 4. மேல்வாய்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 2 4 3 1
(E) விடை தெரியவில்லை

61. சரியானது
(A) ஊண் - இறைச்சி
(B) ஊன் - உணவு
(C) கணம் - சுமை
(D) கனம் - பளு
(E) விடை தெரியவில்லை

62. பொருத்துக.
a. ஈறுபோதல் - 1. பச் (ச் +ஊ) ன்
b. ஈற்றயல் உயிர் கெடல் - 2. பச்ச் +ஊன்
c. தன்னொற்று இரட்டல் - 3. பச் +ஊன்
d. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - 4. பசு + ஊன்
(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 4 2 3 1
(E) விடை தெரியவில்லை

63. பொருத்துக.
a. கயன்முன் – 1. ஏவல் பன்மை வினைமுற்று
b. திரைகவுன் – 2. பண்புத்தொகை
c. கூர்ம்படை – 3. வினைத்தொகை
d. ஓம்புமின் – 4. ஆறாம் வேற்றுமைத்தொகை
(A) 4 3 2 1
(B) 1 2 3 4
(C) 3 4 2 1
(D) 2 1 4 3
(E) விடை தெரியவில்லை

64. பொருத்துக.
a. பால்வண்ணம் பிள்ளை - 1. பா. செயப்பிரகாசம்
b. மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து - 2. ராஜம்கிருஷ்ணன்
c. சட்டை - 3. ஜெயகாந்தன்
d. வேலி - 4. வல்லிக்கண்ணன்
e. மகன் - 5. புதுமைப்பித்தன்
(A) 1 2 3 4 5
(B) 5 4 3 2 1
(C) 2 3 5 4 1
(D) 5 4 2 3 1
(E) விடை தெரியவில்லை

65. யார் தன் கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மணவன் உறங்கிக் கொண்டு இருக்கிறான் என்று எழுத சொன்னார்?
(A) வீரமாமுனிவர்
(B) ஆறுமுக நாவலர்
(C) ஜி.யு.போப்
(D) க.சச்சிதானந்தன்
(E) விடை தெரியவில்லை

66. வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு என்று ------ பாடுகிறது.
(A) திருக்கோவை
(B) திருப்பாவை
(C) சஞ்சீவிபர்வதச் சாரல்
(D) கள்வனின் காதல்
(E) விடை தெரியவில்லை

67. திருக்குறளையும் திருவாசகத்தையும் யார்? எந்த மொழியில் மொழியெர்ப்பு செய்து உலகத்திற்குத் தமிழின் பெருமையை வெளிப்படுத்தியவர்?
(A) வீரமாமுனிவர், இலத்தீன்
(B) ஜி.யு.போப், ஆங்கிலம்
(C) எல்லீஸ், ஆங்கிலம்
(D) ஜி.யு.போப், கனடா
(E) விடை தெரியவில்லை

68. பொருத்துக.

| | |
|---|---|
| a. கிழிசல் | - 1. நாஞ்சில் நாடன் |
| b. ஓர் உல்லாசப் பயணம் | - 2. வண்ணதாசன் |
| c. ஒவ்வொரு கல்லாய் | - 3. கந்தர்வன் |
| d. மண் | - 4. அய்க்கண் |
| e. பழிக்குப் பழி | - 5. க.நா.சேனாதிபதி |

(A) 1 2 3 4 5
(B) 1 4 3 2 5
(C) 4 5 3 2 1
(D) 5 4 3 2 1
(E) விடை தெரியவில்லை

69. அரங்குச்சாவி என்பதின் பொருள் என்ன.
(A) மெழுகால் பூசப்பட்ட சாவி
(B) இரும்பால் செய்யப்பட்ட திறவுக்கோல்
(C) வீட்டு அரையின் சாவி
(D) மரத்தால் செய்யப்பட்டது
(E) விடை தெரியவில்லை

70. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. குடைவரைக் கோயில்கள் பழமையான கோவில் பிள்ளையார்பட்டி யில் உள்ளது.
2. குடைவரைக் கோயில்கள் பாண்டியர் கால படைப்புகளாகும்.
3. 9ம் நூற்றாண்டோடு குடைவரைக் கோயில்கள் அமைக்கும் பணி நின்று விட்டது
4. தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந்தது.

(A) அனைத்தும் சரி
(B) 1 3 4
(C) அனைத்தும் தவறு
(D) 1 2 4
(E) விடை தெரியவில்லை

71. பொருத்துக.

a. மாமல்லபுரம் - 1. கைலாய நாதர் கோவில்
b. காஞ்சிபுரம் - 2. கடற்கரைக் கோவில்
c. திருப்பத்தூர் - 3. விசயாலய சோழீச்சுரம்
d. நார்த்தமலை - 4. திருத்தளிநாதர் கோவில்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 2 3 4 1
(E) விடை தெரியவில்லை

72. பொருத்துக.

a. உயர்தனிச் செம்மொழி - 1. தேவநேயப் பாவாணர்
b. சமரசம் - 2. பரிதிமாற் கலைஞர்
c. கவிதை - 3. திரு.வி.க
d. வாழ்க்கை - 4. வையாபுரிப்பிள்ளை
e. ஆவுந்தமிழரும் - 5. இளவழகனார்

(A) 1 2 3 4 5
(B) 2 3 4 5 1
(C) 5 4 3 2 1
(D) 2 4 3 5 1
(E) விடை தெரியவில்லை

73. மகாத்மா காந்தியடிகள் குறித்து பொருத்துக.

a. மனசாட்சி இல்லாத – 1. வழிபாடு
b. மனித நேயம் இல்லாத – 2. அறிவியல்
c. தியாகம் இல்லாத – 3. மகிழ்ச்சி

(A) 1 2 3
(B) 2 3 1
(C) 3 2 1
(D) 2 1 3
(E) விடை தெரியவில்லை

74. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி – மதுரைக்காஞ்சி
2. மையறு படிவத்து வானவர் முதலா எவ்வகையுயிர்க்கும் உவமங்காட்டி – மணிமேகலை

மேற்கண்டவற்றில் சரியானது எது

(A) 1 சரி
(B) 2 சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டுமில்லை
(E) விடை தெரியவில்லை

75. ------ உள்ள மண்டபத்தில் காணப்படும் எழிலார்ந்த ஆடல் மகளின் ஓவியம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

(A) நாரத்தமலை
(B) பிள்ளையார்பட்டி
(C) தாராசுரம் ஐராவதேசுவரர்
(D) பனமலை
(E) விடை தெரியவில்லை

76. பொருத்துக. மகாத்மா காந்தியடிகள்

a. கொள்கை இல்லாத – 1. கல்வி
b. உழைப்பு இல்லாத – 2. வணிகம்
c. நேர்மை இல்லாத – 3. செல்வம்
d. ஒழுக்கம் இல்லாத – 4. அரசியல்

(A) 1 2 3 4
(B) 2 1 4 3
(C) 4 3 2 1
(D) 4 2 3 1
(E) விடை தெரியவில்லை

77. பொருந்தாதது
(A) உயர்சினை – வினைத்தொகை
(B) பகலுறை – ஏழாம் வேற்றுமைத்தொகை
(C) புல்லார் - மூன்றாம் வேற்றுமைத்தொகை
(D) வல்விரைந்து – ஒரு பொருட்பன்மொழி
(E) விடை தெரியவில்லை

78. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. செலீஇய | - | 1. இசைநிறையளபெடை |
| b. படூஉம் | - | 2. சொல்லிசையளபெடை |
| c. ஞான்றே | - | 3. ஏகாரம் அசைநிலை |
| d. குருகும் | - | 4. இழிவு சிறப்பும்மை |

(A) 1 2 3 4
(B) 2 1 3 4
(C) 4 3 2 1
(D) 2 3 4 1
(E) விடை தெரியவில்லை

79. வையகம் - என்பதின் இலக்கணக்குறிப்பு
(A) இடுகுறிப்பெயர்
(B) காரணப்பெயர்
(C) இடவாகுபெய்
(D) பொருட்பெயர்
(E) விடை தெரியவில்லை

80. முற்றெச்சம் இலக்கணக்குறிப்புக்கு எது சரியானது.
(A) தூக்கார்
(B) தெரிவார்
(C) மறப்பது
(D) செய்யாமல்
(E) விடை தெரியவில்லை

81. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி
(A) எடுத்துக்காட்டு உவமையணி
(B) உவமையணி
(C) சொற்பொருள் பின்வருநிலையணி
(D) உருவக அணி
(E) விடை தெரியவில்லை

82. தவறானது எது

(A) விருந்து – பண்பாகு பெயர்

(B) தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத்தொகை

(C) உண்ணாது – எதிர்மறை வினையெச்சம்

(D) பொறுத்தார் - தொழிற்பெயர்

(E) விடை தெரியவில்லை

83. கண்ணுதல் என்பது ---- இலக்கணம்

(A) இலக்கணப்போலி

(B) இலக்கணமுடையது

(C) போலி

(D) இடக்கரடக்கல்

(E) விடை தெரியவில்லை

84. சரியானத் தொடர் எது. பழமொழி (சொலவடை)

(A) விழுந்த முதலைக்கு அகழியில் அதுவே சொர்ககம்

(B) முதலை அகழியில் விழுந்ததால் அதுவே சொர்க்கம்

(C) சொர்க்கம் அகழியில் விழுந்த முதலைக்கு

(D) அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்

(E) விடை தெரியவில்லை

85. ஒலி வேறுபாடு உணர்ந்து பொருள் அறிக

வலை – வழை - வளை

(A) மீன்பிடிவலை – சுரபுன்னை - மோதிரம்

(B) மீன்வலை - மரம் - சுரபுன்னை

(C) பொந்து - சுரபுன்னை - வளைவு

(D) மீன்வலை - சுரபுன்னை - வளையல்

(E) விடை தெரியவில்லை

86. பொருந்தாதது.

(A) படர்முகில் - பண்புத்தொகை

(B) சுடர் ஒளி – வினைத்தொகை

(C) தங்கத்தீவு – உருவகங்கள்

(D) இருக்கும் ஆரணம் - இருபெயரெட்டு பண்புத்தொகை

(E) விடை தெரியவில்லை

87. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது
(A) நிலைமொழி ஈறு நீங்கும்
(B) நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்
(C) வருமொழி முதல் கெடும்
(D) நிலைமொழி முதல் கெடும்
(E) விடை தெரியவில்லை

88. வெறியாட்டுப்பறை, தொண்டகப்பறை எந்நிலத்துடன் தொடர்புடையது.
(A) குறிஞ்சி
(B) முல்லை
(C) மருதம்
(D) நெய்தல்
(E) விடை தெரியவில்லை

89. தவறானது
(A) கண்ணுதல் - இலக்கணப்போலி
(B) சொற்பதம் - ஒரு பொருட்பன்மொழி
(C) பழ ஆவணம் - உவமைத்தொகை
(D) பொங்குதாமரை - வினைத்தொகை
(E) விடை தெரியவில்லை

90. பொருந்தாதது.
(A) மாடுகள் ஓடா
(B) அவை எல்லாம்
(C) ஏற்கத்தக்கது அல்ல
(D) மதுரை என்னும் நகரம்
(E) விடை தெரியவில்லை

91. பொருத்துக.
a. குறிஞ்சி - 1. தொண்டகப் பறை
b. முல்லை - 2. நெல்லரி திணை
c. மருதம் - 3. ஏறுகோட்பறை
d. நெய்தல் - 4. மீன்கோட்பறை
(A) 1 2 3 4
(B) 2 1 4 3
(C) 1 3 2 4
(D) 1 3 4 2
(E) விடை தெரியவில்லை

92. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்

அஃதறி கல்லா தவர்

(A) இணை எதுகை

(B) ஒரூஉ எதுகை

(C) கீழ்கதுவாய் எதுகை

(D) மேற்கதுவாய் எதுகை

(E) விடை தெரியவில்லை

93. பொருந்தாதது

(A) குறிஞ்சி - யாமம்

(B) முல்லை - மாலை

(C) மருதம் - காலை

(D) நெய்தல் - ஏற்பாடு

(E) விடை தெரியவில்லை

94. பிழைகளை நீக்கி எழுதுக.

(A) வண்டிகள் ஓடா

(B) சென்னை என்னும் நகரம்

(C) ஏற்கத்தக்கது அன்று

(D) மக்கள் கிடையாது

(E) விடை தெரியவில்லை

95. ஒருமை பன்மை

(A) கருணை உள்ளவன் பாக்கியவான்கள்

(B) கருணை உள்ளவர்கள் பாக்கியவான்

(C) கருணை உள்ளவர்கள் பாக்கியவான்கள்

(D) கருணை உள்ளது

(E) விடை தெரியவில்லை

96. இயைந்தவர் வேர்ச்சொல்

(A) இயைந்த

(B) இயை

(C) இயைந்து

(D) இயைதல்

(E) விடை தெரியவில்லை

97. பொருத்துக.

a. கார்காலம் - 1. ஆணி, ஆடி

b. கூதிர்காலம் - 2. சித்திரை, வைகாசி

c. முன்பனிகாலம் - 3. மாசி, பங்குனி

d. பின்பனிகாலம் - 4. மார்கழி, தை

e. இளவேனில் - 5. ஐப்பசி, கார்த்திகை

f. முதுவேனில் - 6. ஆவணி, புரட்டாசி

(A) 1 2 3 4 5 6

(B) 6 5 4 3 2 1

(C) 2 3 4 5 1 6

(D) 3 4 5 2 6 1

(E) விடை தெரியவில்லை

98. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. கவிஞரேறு – பெருஞ்சித்திரனார்

2. பாவலரேறு – வாணிதாசன்

மேற்கண்டவற்றில் சரியானது

(A) 1 சரி

(B) 2 சரி

(C) இரண்டும் சரி

(D) இரண்டுமில்லை

(E) விடை தெரியவில்லை

99. அ. வரதநஞ்சைப்பிள்ளை குறித்து

1. தெலுங்கையும் வடமொழியையும் நன்கு அறிந்தவர்
2. விரைந்து கவி பாடுவதில் வல்லவர்
3. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியர் என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவர்
4. கற்றோரால் புலவரேறு என்று சிறப்பிக்கப் பெற்றார்.

(A) 1 2 3 சரி

(B) 2 3 4 சரி

(C) 2 3 சரி

(D) 1 2 3 4 சரி

(E) விடை தெரியவில்லை

100. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. அகப்பொருள் - பழந்தமிழ் மக்களின் அகவாழ்க்கை முறையை அறியலாம்.
2. புறப்பொருள் - பழந்தமிழரின் புறவாழ்க்கை முறையை காணலாம்

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) இரண்டும்

(D) இரண்டுமில்லை

(E) விடை தெரியவில்லை

******